# புதுக்கோட்டை நகராட்சி

## புதுக்கோட்டை நகராட்சி நகர்மன்றத்தின் தனி அலுவலர் அவர்களின் தீர்மானத்திற்கென கொண்டுவரப்பட்ட சாதாரணக் கூட்டம் மன்றப்பொருள்கள் நாள்:24.02.2021

**பொருள் எண்:1**

புதுக்கோட்டை நகராட்சி காந்தி நகர் OHT, அடப்பன்வயல் OHT, பூங்கா நகர் OHT கள் உள்ளன. காந்தி நகர் **3** இலட்சம் கொள்ளளவு கொண்டது. அடப்பன்வயல் OHT **3** இலட்சம் , பூங்கா நகர் OHT **3** இலட்சம் கொள்ளளவு கொண்டது. இந்த மூன்று OHT களுக்கு வர்ணம் பூசவும் மற்றும் பூங்கா நகர் OHTக்கு புதியதாக compound Wall அமைக்கவும் மற்றும் காந்தி நகர் OHT க்கு Inlet / Outlet CI,DI மாற்றவும், சந்தைப்பேட்டை OHT கைப்பிடி **4**, அடப்பன்வயல் OHT கைப்பிடி **7**, பூங்கா நகர் கைப்பிடி **5**, காந்தி நகர் OHT கைப்பிடி **6** ஆகியவகளை அமைக்கவும், பூங்கா நகரில் புதியதாக compound wall அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.**7.50/–** இப்பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:542**
**அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்:2**

புதுக்கோட்டை நகராட்சியில் **2020–2021**ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள **08.01.2021** அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| ன | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்பு ள்ளி விகிதம் (ரூபாயில்) | ஒப்பந்தப்புள் விகிதம் |
|---|---|---|---|---|---|
| | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண். 40 பிச்சத்தான்பட்டி ரயில்வே | **1.85** | திரு.S.கணேசன், புதுக்கோட்டை. | **161458.00** | மதிப்பீட்டை 0.34 % குை |

**தீர்மான எண்:543**
**அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்டேசன் ரவுண்டானா முதல் வட்டாபட்டி செல்லும் சாலையில் கற்பகா நகர், மலையப்பா நகர், வட்டாபட்டி குடியிருப்பு, PVR நகர், சாரதா கார்டன் ஆகிய பகுதிகளுக்கு செல்லும் PVC குழாயை புதிதாக மாற்றி அமைத்தல். | | திரு.P.சின்னக்கருப்பையா புதுக்கோட்டை. | **166114.00** | மதிப்பீட்டை விட 2.47% அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.கணேசன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட **0.34%** குறைவு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்:3**

புதுக்கோட்டை நகராட்சியில் **2020–2021**ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள **03.02.2021** அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:544**
**அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

| பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் (ரூபாயில்) | ஒப்பந்தப்புள் விகிதம் |
|---|---|---|---|---|
| புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.29 ராஜாகுளம் வாம்பே சுகாதார வளாகத்தில் புதியதாக போர்வெல் அமைத்தல். | **1.54** | ராயல் கன்ஸ்ட்ரக்சன், புதுக்கோட்டை | 133733.00 | மதிப்பீட்டை 0.04 % குறை |
| | | கணபதி கன்ஸ்ட்ரக்சன் புதுக்கோட்டை | 136083.00 | மதிப்பீட்டை 1.69% அதி |

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ராயல் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்

| | | |
|---|---|---|
| | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.04% குறைவு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். | |
| **பொருள் எண்:4** | புதுக்கோட்டை நகராட்சி பல்வேறு திட்டப்பணிகள் நகராட்சி சார்பாக பணிகள் குறித்து மாலைமலர் பத்திரிக்கையில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணம் ரூ. 45,600/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**அலுவலக குறிப்பு..**<br>அ. மன்றம் பதிவு செய்யலாம்.<br>ஆ. மேற்படி செலவுத்தாகை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்:545**<br>**அலுவலக குறிப்பு அ.ஆஏற்று அனுமதிக்கப்பட்டது.** |
| **பொருள் எண்:5** | புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரிமளம் ரோடு நகரளவு எண். 94/11ல் உள்ள இடம் தனக்கு சொந்தமானது என தெரிவித்து ஏற்கனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No. 114/2015 என்ற எண்ணில் தொடரப்பட்ட வழக்கு 29/07/2020ல் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதை எதிர்த்து தற்போது புதுக்கோட்டை மாவட்ட சார்பு நீதிமன்றத்தில் , திரு. கே. பாலசுப்ரமணியன், பவர் ஏஜென்ட் அஞ்சலை தேவி என்பவர் நகராட்சி ஆணையரை பிரதிவாதியாக சேர்த்து A.S.No.11/2020 என்ற எண்ணில் மேல்முறையீட்டு வழக்கு தொடர்ந்துள்ளார், மேற்படி மேல்முறையீட்டு வழக்கை திரு.ஆர். வெங்கடேசன், பி.ஏ,பி.எல்., நகர்மன்ற வழக்கறிஞரை தொடர்ந்து நடத்துமாறு கேட்டுக்கொள்ளலாம். மேற்படி வழக்கிற்கு ஆகும் மொத்த செலவினத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு.** மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி வழக்கிற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | **தீர்மான எண்:546**<br>**அலுவலக குறிப்பு அ.ஆஏற்று அனுமதிக்கப்பட்டது.** |
| **பொருள் எண்:6** | புதுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் முதல் பிரிவு கட்டணம் தண்டும் உரிமத்திற்கு 2018–2019 முதல் 2020–2021ஆம் ஆண்டிற்கு திரு. எஸ். கார்த்திகேயன், த/பெ சுப்பிரமணியன், எண். 48/53, அடப்பன்வயல் 2ம் வீதி, புதுக்கோட்டை என்பவருக்கு இந்நகராட்சி மூலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இந்நிலையில் 2020–2021ம் ஆண்டில் கொரோனா என்னும் பெருந்தொற்று காரணமாக மேற்படி உரிமத்தில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அதற்குரிய தொகையை தள்ளுபடி செய்யக்கோரியும் , புதுக்கோட்டை நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். WP(MD)NO.1126/2021–ன்படி மேற்படி நபர் வழக்கு தொடர்ந்துள்ளார். அவ்வாறு தொடரப்பட்ட | **தீர்மான எண்:547**<br>**அலுவலக குறிப்பு அ.ஆஏற்று அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 7500/—ஐ வழங்கிட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.பி.மகேந்திரன் என்பவர் கோரியுள்ளார். எனவே, மேற்படி வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ. 7500/—ஐ வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு..**<br>அ. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ. அவசர அவசியத்தை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | |
| **பொருள் எண்:7** | புதுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் கட்டணம் தண்டும் உரிமத்திற்கு 2018—2019 முதல் 2020—2021ஆம் ஆண்டிற்கு திரு.பா.ராஜா த/பெ பாலகிருஷ்ணன், மேல5ம் வீதி, புதுக்கோட்டை என்பவருக்கு இந்நகராட்சி மூலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இந்நிலையில் 2020—2021ம் ஆண்டில் கொரோனா என்னும் பெருந்தொற்று காரணமாக மேற்படி உரிமத்தில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அதற்குரிய தொகையை தள்ளுபடி செய்யக்கோரியும் , மேலும் மூன்றாண்டுகளுக்கு கால நீட்டிப்பு செய்து தர கோரியும், புதுக்கோட்டை நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். WP(MD)NO.1124/2021—ன்படி மேற்படி நபர் வழக்கு தொடர்ந்துள்ளார். அவ்வாறு தொடரப்பட்ட வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 7500/—ஐ வழங்கிட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு.பி.மகேந்திரன் என்பவர் கோரியுள்ளார். எனவே, மேற்படி வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ. 7500/—ஐ வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு..**<br>அ. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ. அவசர அவசியத்தை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்:548**<br>**அலுவலக குறிப்பு அ.ஆஏற்று அனுமதிக்கப்பட்டது.** |
| **பொருள் எண்:8** | புதுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியான விவேகானந்த நகர், பழைய சர்வே எண். 122/LIA, புதிய சர்வே எண். 58/7 உட்பிரிவு எண். 58/7A என்ற இடத்திற்கு ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை WP(MD)NO.1194/2021—ன்படி, ஆணையர், புதுக்கோட்டை நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.<br>எனவே, நகராட்சி சார்பாக மேற்படி வழக்கில் நகராட்சி வழக்கறிஞர் திரு. பி. மகேந்திரன் அவர்களை | **தீர்மான எண்:549**<br>**அலுவலக குறிப்பு அ.ஆஏற்று அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | கொண்டு வழக்கு நடத்தவும் மற்றும் வழக்கு தொடர்பான அனைத்து செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு..**<br>அ. பொது நிதியில் இருந்து மன்றம் அனுமதிக்கலாம். | |
| **பொருள் எண்:9** | புதுக்கோட்டை நகராட்சி , வார்டு எண். 3, இறைவன் நகர், நேரு நகர் ஆகிய நகர்களில் தெருவிளக்கு வசதி இல்லை. தெருவிளக்கு வசதி அமைக்க மின்வாரியத்தில் இருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் ரூ. 78,960/— இந்த தொகையை செலுத்திட கடிதம் வரப்பெற்றுள்ளது. இந்த தொகையை மின்வாரியத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு..**<br>அ. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ. மேற்படி பணியின் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:550<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| **பொருள் எண்:10** | புதுக்கோட்டை நகராட்சி TELC நகராட்சி நடுநிலைப்பள்ளி எதிர்புறம் உள்ள சந்தில் அதிக பொதுமக்கள் வசித்து வருவதால் சுகாதார சந்தில் உள்ள மழைநீர் வடிகால் மேற்புறம் சிமெண்ட் தளம் அமைக்க இடம் நேராய்வு செய்யப்பட்டு மழைநீர் வடிகால் சிமெண்ட் தளம் அமைத்து கொடுக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி TELC சந்தில் சிமெண்ட் தளம் அமைத்த திருத்திய மதிப்பீடு ரூ. 6,45,000/— மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:—</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:551<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது. |
| **பொருள் எண்:11** | புதுக்கோட்டை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு. ஆர். கோபிநாத், வார்டு எண். 12, ஜீவா நகர் முதல் சிவானந்தபுரம் துப்புரவு காலனி சிமெண்ட் தளம் அமைத்தல் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட PSD 5% தொகை ரூ. 35,000/— நாள். 26.02.2016 கோரி ஒப்பந்ததாரர் விண்ணப்பித்துள்ளார்.<br>மேற்காணும் தொகையை திரும்ப வழங்க கோரி 11.02.2021 அன்று விண்ணப்பத்தில் கோரியுள்ளார். | தீர்மான எண்:552<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது. |

எனவே, மேற்காணும் வைப்புத்தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்:12**

புதுக்கோட்டை நகராட்சியில் பொது சுகாதார தொற்று நோய் தடுப்பு பணிக்கு தேவையான பேக்டிசைடு ( Bacticide ) கொள்முதல் செய்ய 15.02.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு வைப்புத்தொகை ரூ. 9,500/– செலுத்தி கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | வைப்புத்தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ்,<br>1/102, சேலம் மெயின்ரோடு,<br>செல்லப்பம்பட்டி,<br>நாமக்கல் | ரூ. 2950/– | Rs :9500/-<br>Ch.No: 14542<br>Date: 15.02.2021 |
| 2. | ஸ்ரீ பிளாஸ்டோ டெக்,<br>31/1, திருமுடிவாக்கம்,<br>சென்னை. | ரூ. 3100 /– | Rs :9500/-<br>Ch.No: 14543<br>Date: 15.02.2021 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு..**

அ . மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ. பொது சுகாதார நோய்த்தடுப்பு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:553**

அலுவலக குறிப்பு அ.ஆஏற்று அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:13** | புதுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் நகராட்சி பள்ளிகளுக்கு புதியதாக தீயணைப்பு கருவிகள் 100 எண்ணம் பொருத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.7,75,500/- தொகைக்கு பணிகளை மேற்கொள்ள கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளதுரு.<br><br>1. Raj Corporation Rs.757500/-<br>2. Sri Balaji Marketing Rs.765000/-<br>3. Sane Tech Engineering Rs.775000/-<br><br>மேற்காணும் விலைப்பட்டியலில் குறைவான விநியோகம் செய்ய கொடுக்கப்பட்டுள்ள விலைப்புள்ளி Raj Corporation, Thiruvarur Rs.7,57,500/- விநியோக உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) குறைவான விநியோகம் செய்ய விலைப்புள்ளி கொடுத்துள்ள Raj Corporation Thiruvarur விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (9081/2020/இ1). | தீர்மான எண்:554<br>அலுவலக குறிப்பு அ.ஆஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| **பொருள் எண்:14** | புதுக்கோட்டை நகராட்சி காந்தி நகர் 7ம் வீதி ஆலங்குடி சாலை சந்திப்பில் உள்ள மினிபோர் பழுதாகிவிட்டது. இந்த மினி போரின் பழுதுகளை நீக்கிட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1,15,000/- குடிநீர் பணியாதக இருப்பதால் பணியினை அவசரம் அவசியம் கருதி இப்பணியை முக்கிய பணியாக ஏற்று மாவட்ட நகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.கே.பரமசிவம் மூலம் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிகு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மான எண்:555<br>அலுவலக குறிப்பு 1.2 ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண்:15**

புதுக்கோட்டை நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018-2019ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 19.01.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் (ரூபாயில்) | ஒப்பந்தப்புள் விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1) | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்: 40 கற்பகம்நகர் ரோடு மாலையீடு அருகில் சாலை அமைத்தல் | 10.00 | திரு.என்.ராமதாஸ் புதுக்கோட்டை | 877079.00 | மதிப்பீட்டை 0.16 % கு |
| | | | திரு.கே. பரமசிவம் புதுக்கோட்டை. | 895797.00 | மதிப்பீட்டை 1.93% அதி |

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.என். ராமதாஸ், ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.16 சதவீதம் குறைவு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:556
அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:16**

புதுக்கோட்டை நகராட்சியில் 2020-2021 ஆண்டு பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 18.02.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் (ரூபாயில்) | ஒப்பந்தப்புள் விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1) | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்: 32 காந்தி நகர் 4ம் வீதியில் புதியதாக சிறுபாலம் அமைத்தல் | 1.15 | திரு.கே. பரமசிவம் புதுக்கோட்டை. | 99692.00 | மதிப்பீட்டை 0.25 % கு |
| | | | திரு.ஆர். மணிகண்டன் புதுக்கோட்டை. | 101108.00 | மதிப்பீட்டை 1.15% அதி |

தீர்மான எண்:557
அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு:<br>மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கே.பரமசிவம் ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.25 சதவீதம் குறைவு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்:17</td><td>இந்நகராட்சி அலுவலக பொறியர் பிரிவு குடிநீர் டேங்கர் லாரி TN55-8894க்கு புதிய 12Volt 100AH பேட்டரி 2 எண்கள் வாங்கி பொருத்தும் பணிக்கும் , அதற்கான செலவினத்திற்கும் குடிநீர் விநியோகப்பணியின் அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி பணிக்கு உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து கீழ் கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.
<table>
<tr><td rowspan="2">வ. எ ண்.</td><td rowspan="2">பணி விவரம்</td><td rowspan="2">QTY</td><td colspan="3">விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்கள்</td></tr>
<tr><td>கனி பேட்டரி ஷாப் புதுக்கோட்டை</td><td>பொன்னி பேட்டரி புதுக்கோட்டை</td><td>சந்தோஸ் ஏஜென்சீஸ் புதுக்கோட்டை</td></tr>
<tr><td></td><td>நகராட்சி குடிநீர் டேங்கர் லாரி TN55-8894க்கு புதிய 12Volt 100AH பேட்டரி விநியோகம் செய்தல்</td><td>2</td><td>ரூ.17200/-</td><td>ரூ.17800/-</td><td>ரூ.18000/-</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கனி பேட்டரி ஷாப் நிறுவனத்தால் அளிக்கப்பட்டுள்ளது. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.( 2284/2020/இ3)</td><td>தீர்மான எண்:558 பதிவு செய்யப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்:18</td><td>இந்நகராட்சி அலுவலக பொறியர் பிரிவு குடிநீர் டேங்கர் லாரி TN55-8893க்கு தகுதிச்சான்று காலம் 31.03.2021வுடன் முடிவுறுவதால் மேற்படி வாகனத்திற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளது.<br>மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க வாகன பழுதுகள் சீர் செய்ய வாகனம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் ஆய்வு செய்து தெரிவிக்கப்பட்ட பழுதுகள் சீர் செய்ய</td><td>தீர்மான எண்:559 அலுவலக குறிப்பு அ.ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ)மேற்படி செலவினம் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ)மேற்படி வாகனம் பழுது சீர் செய்ய் மோட்டார் வாகன பராமரிப்பு அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினத்தைவிட கூடுதலாக ஆகும் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் பின்னேற்பு பெறவும் மன்றம் அனுமதிக்கலாம். ( 8311/2020/இ3 ) | |
| பொருள் எண்:19 | புதுக்கோட்டை நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் மருத்துவ பிரிவில் பணிபுரிந்து வரும் நகர சுகாதார செவிலியர்களுக்கு 2020-2021 ம் ஆண்டுக்கான சீருடைப்படி வழங்க வேண்டியுள்ளது. அசராணை எண் நிலை 36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நப 3) நாள் 05.04.2018 ன் படி தலா ரூ. 1000/- மட்டும் வழங்கலாம். அதன்படி இந்நகராட்சியில் பணியாற்றி வரும் நகர சுகாதார செவிலியர்களுக்கு (மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள்) 10 நபர்களுக்கு தலா ரூ. 1000/- வீதம் ரூ. 10,000/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:560<br>அலுவலக குறிப்பு 1.2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்:20 | புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 42 வார்டுகளிலும் மழைக்கலாம் ஆரம்பித்ததை தொடர்ந்து ஆங்காங்கே மழைநீர் தேங்கி கொசுக்கல் முட்டை இட்டு கொசுக்களினால் தொற்றக்கூடிய நோய்கள் பரவும் நிலை உள்ளது. மேலும் கொசுக்களினால் டெங்கு காய்ச்சல், சிக்குன்குனியா, மலேரியா, யாணைக்கால் நோய், போன்ற நோய்களில் இருந்து பொதுமக்களை காக்கும் பொருட்டு பைரித்திரம்,மால்த்தியானன் மருந்து கொண்டு முதிர் கொசு ஒழிப்பு பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கும் நிலையில் தற்போது புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் கொசுக்களை கட்டுப்படுத்த Pulse Fog (K- 10-SP) Portable Thermal Fogging Machine கொள்முதல் செய்ய 12.02.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு கீழ் கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | தீர்மான எண்:561<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>வைப்புத் தொகை</th></tr>
<tr><td>1</td><td>Global Traders 2rd floor Philomena tower race course road Coimbatore.</td><td>ரூ.99200/–</td><td>Ch.no.001040<br>ரூ.10,000/–<br>CUB</td></tr>
<tr><td>2</td><td>Oxzone org 31/39 A-Rice shop lane , Mannargodi.</td><td>ரூ.97664/–</td><td>Ch.no.021795<br>ரூ.10,000/–<br>BOI</td></tr>
<tr><td>3</td><td>Asian Associates Villiams Road Trichy</td><td>ரூ.1,00,800/–</td><td>Ch.no.719729<br>ரூ.10,000/–<br>SBI</td></tr>
</table>
வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கலாம்.<br>
<u>அலுவலக குறிப்பு:–</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பொது சுகாதாரத்தின் அவசரம் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கொடுத்த Oxzone org 31/39 A-Rice shop lane , Mannargodi தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:21</td>
<td>புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 42 வார்டுகளிலும் மழைக்கலாம் ஆரம்பித்ததை தொடர்ந்து ஆங்காங்கே மழைநீர் தேங்கி கொசுக்கல் முட்டை இட்டு கொசுக்களினால் தொற்றக்கூடிய நோய்கள் பரவும் நிலை உள்ளது. மேலும் கொசுக்களினால் டெங்கு காய்ச்சல், சிக்குன்குனியா, மலேரியா, யாணைக்கால் நோய், போன்ற நோய்களில் இருந்து பொதுமக்களை காக்கும் பொருட்டு பைரித்திரம்,மால்த்தியானன் மருந்து கொண்டு முதிர் கொசு ஒழிப்ப பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கும் நிலையில் தற்போது புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் சுகாதார பிரிவிக்கு ஒன்று என மொத்தம் 10 பிரிவிற்கு Pulse Fog (K- 10-SP) Portable Thermal Fogging Machine 10 எண்ணிக்கை புதியது வாங்கி வழங்கோரி துப்புறவு ஆய்வரின் அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. துப்புரவு ஆய்வரின் அறிக்கையின்படி 10 எண்ணம் Fogging Machine வாங்கி வழங்குவதற்கு உத்தேச செலவு தொகை ரூ.9,80,000/– மன்றத்தின் அனுமதி</td>
<td>தீர்மான எண்:562<br>அலுவலக குறிப்பு ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1. பொது சுகாதாரம் நோய் தடுப்பு அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். | |
| **பொருள் எண்:22** | புதுக்கோட்டை நகராட்சி பெரியார் சிலைக்கு கூண்டு அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.22,000/- இப்பணியை மேற்கொள்ள அவசரம் அவசியம் கருதி மாவட்ட நகராட்சி சட்டம் பிரிவு 15இல் பணியை மேற்கொள்ளவும் ஒப்படைப்பு பணியாக ஒப்பந்தக்காரர் திரு.எஸ். சுப்பிரமணியன் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** அ) மன்றம் பதிவு செய்யலாம்<br>ஆ) மேற்படி செலவுத்தொகை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 563<br>அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| **பொருள் எண்:23** | புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 38இல் திருவள்ளுவர் நகர் 2ம் வீதியில் தாய் சேய் நலவிடுதி அருகில் உள்ள ஆழ்குழாய் கிணறுடன் கூடிய மினிடேங்கில் இயங்கி வந்த 1 எச்.பி. மின் மோட்டார் மிகவும் பழமையான காரணத்தால் பழுதடைந்துவிட்டது. இதனால் மேற்கண்ட மினி டேங்கில் தண்ணீர் நிரப்ப இயலவில்லை. அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு இதனால் குடிநீர் மற்றும் இதர தண்ணீர் பயன்பாடுகளுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே பழுதடைந்த மின்மோட்டாரை மாற்றி புதிதாக 1.எச்.பி. மின் மோட்டார் பொருத்திப முது நீக்கம் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.40,000/- மேலும் இப்பணியை குடிநீர் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.ஆர். மணிகண்டன் மூலம் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மான எண்: 564<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது. |
| **பொருள் எண்:24** | புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 38இல் திருவள்ளுவர் நகர் 2ம் வீதி மற்றும் 3ம் வீதி சந்திப்பில் இயங்கி வந்த ஆழ்குழாய் கிணறுடன் கூடிய மினிடேங்கில் உள்ள ஆழ்குழாய் கிணறு மண் சரிந்து தூர்ந்துவிட்டது. இதனால் அந்த ஆழ்குழாய் கிணற்றில் இருந்து மினிடேங்கிற்கு தண்ணீர் நீரப்ப இயலவில்லை. இதனால் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் மற்றும் இதர தண்ணீர் பயன்பாடுகளுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே தூர்ந்து போன ஆழ்குழாய் கணறுக்கு பதிலாக புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து பழுது நீக்கம் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.95,000/- மேலும் இப்பணியை குடிநீர் அவசர | தீர்மான எண்: 565<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>அவசியம் கருதி நகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.ஆர். மணிகண்டன் மூலம் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:25</td>
<td>புதுக்கோட்டை நகராட்சி Local Fund A.D. Office உதவி இயக்குநர் அலுவலகத்தில் தண்ணீர் சரிவர வரவில்லை. மேலும் கழிவறையில் பழுது பார்த்தல் பணி மற்றும் Record Room பழுது பார்க்கப்பட உத்தேச செலவினம் ரூ.1,10,000/- இப்பணி குடிநீர் பணியாக இருப்பதால் இப்பணியை அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.ஆர். மணிகண்டன் மூலம் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.</td>
<td>தீர்மான எண்: 566<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:26</td>
<td>இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2021–2022 ம் கீழ் கீழ்கண்டுள்ள பணிகளை 2021–2022ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு அடிப்படையில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>நகராட்சி வார்டு எண். 1 முதல் 10 வரையிலான பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள சிறுமின்விசை பம்புகள் நகராட்சி கட்டிடங்களில் உள்ள மின் விசை மோட்டார்கள் மற்றும் நீர் உந்து நிலைய மின் விசை மோட்டார்களில் அவ்வபோது ஏற்படும் பழுதுகள் 2021–2022ம் ஆண்டிற்கு சீர் செய்து பராமரித்தல்.</td><td>ரூ.6.50</td></tr>
<tr><td>2</td><td>நகராட்சி வார்டு எண். 11 முதல் 21 வரையிலான பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள சிறுமின்விசை பம்புகள் நகராட்சி கட்டிடங்களில் உள்ள மின் விசை மோட்டார்கள் மற்றும் நீர் உந்து நிலைய மின் விசை மோட்டார்களில் அவ்வபோது ஏற்படும் பழுதுகள் 2021–2022ம் ஆண்டிற்கு சீர் செய்து பராமரித்தல்.</td><td>ரூ.6.50</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்: 567<br>அலுவலக குறிப்பு 1, 2 3 ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 3 | நகராட்சி வார்டு எண். 22 முதல் 32 வரையிலான பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள சிறுமின்விசை பம்புகள் நகராட்சி கட்டிடங்களில் உள்ள மின் விசை மோட்டார்கள் மற்றும் நீர் உந்து நிலைய மின் விசை மோட்டார்களில் அவ்வபோது ஏற்படும் பழுதுகள் 2021–2022ம் ஆண்டிற்கு சீர் செய்து பராமரித்தல். | ரூ.6.50 |
| 4 | நகராட்சி வார்டு எண். 33 முதல் 42 வரையிலான பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள சிறுமின்விசை பம்புகள் நகராட்சி கட்டிடங்களில் உள்ள மின் விசை மோட்டார்கள் மற்றும் நீர் உந்து நிலைய மின் விசை மோட்டார்களில் அவ்வபோது ஏற்படும் பழுதுகள் 2021–2022ம் ஆண்டிற்கு சீர் செய்து பராமரித்தல். | ரூ6.50 |
| 5 | நகராட்சி வார்டு எண். 1 முதல் 21 வரையிலான பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள கைபம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் 2021–2022–ம் ஆண்டிற்கு சீர் செய்து பராமரித்தல். | ரூ.2.00 |
| 6 | நகராட்சி வார்டு எண். 22 முதல் 42 வரையிலான பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள கைபம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் 2021–2022–ம் ஆண்டிற்கு சீர் செய்து பராமரித்தல். | ரூ.2.00 |
| 7 | நகராட்சி வார்டு எண். 1 முதல் 21 வரையிலான பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மானக்குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகள் மற்றும் பழுதுகள் 2021–2022–ம் ஆண்டிற்கு சீர் செய்து பராமரித்தல். | ரூ.6.50 |
| 8 | நகராட்சி வார்டு எண். 22 முதல் 42 வரையிலான பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மானக்குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகள் மற்றும் பழுதுகள் 2021–2022–ம் ஆண்டிற்கு சீர் செய்து பராமரித்தல். | ரூ.6.50 |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

<table>
<tr>
<td>பொருள் எண்:27</td>
<td>
புதுக்கோட்டை நகராட்சியில் 2020–2021ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 25.02.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th></th><th>பணிகளின் விவரம்</th><th>மதிப்பீடு ரூபாய் லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம் (ரூபாயில்)</th><th>ஒப்பந்தப்புள் விகிதம்</th></tr>
<tr><td rowspan="2"></td><td rowspan="2">புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39 மாலையீடு பகுதியில் மதுரை சாலையில் உள்ள ஆழ்குழாயுடன் கூடிய அடிபம்பை மின் மோட்டார் பொத்தி ஆழ்குழாய் கிணறுடன் கூடிய மின் மோட்டார் மூலம் மினி டேங் அமைத்தல்.</td><td rowspan="2">1.10</td><td>திரு.R.மணிகண்டன்<br>புதுக்கோட்டை.</td><td>92627.00</td><td>மதிப்பீட்டை<br>0.12 % கு</td></tr>
<tr><td>திரு.K.பரமசிவம்,<br>புதுக்கோட்டை.</td><td>93934.00</td><td>மதிப்பீட்டை<br>1.27% அதி</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :–</u><br>
அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.R.மணிகண்டன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.12% குறைவு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ஆ) தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்: 568<br>அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:28</td>
<td>
புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட AR மைதானத்தில் 26.01.2021 அன்று குடியரசு தின விழா நிகழ்ச்சி நடைபெற உள்ளதால் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு பொதுமக்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் நலத்திட்டம் மற்றும் விருது வழங்க உள்ளதால் வரும் பொதுருமக்களுக்கு குடிநீர் மற்றும் தற்காலிக கழிப்பறை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.40,000/- மேலும் இப்பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி ஒப்பந்தக்கார் திரு.பி.சின்னக்கருப்பன் மூலம் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு: அ) மன்றம் பதிவு செய்யலாம்.<br>
ஆ) மேற்படி செலவுத் தொகை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்: 569<br>அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:29** | இந்நகராட்சியில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி 42 வார்டுகளில் தினசரி உருவாகும் குப்பைகளை பிரித்து மறு சுழற்ச்சிக்காக 64 Battary Vehicle (BOV) பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 64 Battary Vehicle பணிகளில் பயன்பாட்டில் உள்ளபோது இந்த வாகனங்கள் பழுதாகிவிடுகின்றன அடிக்கடி பழுது ஏற்பட்டுவிடுகிறது. எனவே இந்த வாகனங்களை உடனுக்குடன் பழுதுகளை சரி செய்திட இந்த 64 வாகனங்கள் வருடாந்திர பராமரிப்பு வேண்டியும் இந்த வண்டி பராமரிப்பு பணிக்கு ஒரு மாதத்திற்கு ஒரு வண்டிக்கு ரூ. 2030/- வீதம் (12 மாதத்திற்கு) ஒரு வருடத்திற்கு ரூ. 24,360/- எனவும் ஆக மொத்தம் 64 வாகனத்திற்கு ஓராண்டிற்கு பராமரிப்பு பணியை மேற்கொள்ள ரூ. 15,59,040/- உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 570<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| **பொருள் எண்:30** | புதுக்கோட்டை நகராட்சியில் உண்டாகும் குப்பைகளை பிரித்து வாங்கிட 64 Battary Vehicle பயன்பாட்டில் உள்ளது. இந்த 64 வாகனங்கள் தினமும் இயங்கி வருகிறது. இந்த 64 வாகனங்களில் 35 வாகனங்கள் பழுது ஆகிவிட்டன. இந்த 35 வாகனங்கள் பழுது நீக்கிட இந்த பணியை மேற்கொள்ள 1 வாகனத்திற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 35,000/- எனவும், இந்நகராட்சியில் உள்ள 64 வாகனங்களில் 35 வாகனங்கள் பழுதுகளை நீக்கிட உத்தேச மதிப்பீடு ரூ. 13,00,000/-த்திற்கு இப்பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 571<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>பொருள் எண்:31</td>
<td>புதுக்கோட்டை நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN 55 - R - 6520 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு காப்பீட்டு காலம் முடிவடைவதால் காப்பீட்டுத் தொகை கீழ்க்கண்டவாறு செலுத்த வேண்டியுள்ளது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வாகனம்</th><th>காப்பீட்டுத்தொகை</th></tr>
<tr><td>1.</td><td>TN 55 - R - 6520</td><td>ரூ. 32,541/–</td></tr>
</table>
மேற்கண்ட தொகையை ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு..</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிடலாம்.<br>
2. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.(61/2020/H2)</td>
<td>தீர்மான எண்: 572<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:32</td>
<td>புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32–42 வரை உள்ள பொன்னம்பட்டி, சேங்கைதோப்பு ஆலங்குடி சாலை, உசிலங்குளம், திருவள்ளுவர் நகர், காந்தி நகர், ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுடன் கூடிய மினிடேங்களில் உள்ள பழுதுகளை நீக்கி பொதுமக்களின் குடிநீர் மற்றும் இதர தண்ணீர் பயன்பாடு தேவைகளை நிவர்த்தி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,55,000/– குடிநீர் பணி என்பதால் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி ஒப்பந்தகாரர் திரு.R.மணிகண்டன் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு:–</u><br>
அ) மன்றம் பதிவு செய்யலாம்.<br>
ஆ) மேற்படி செலவுத் தொகை குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்: 573<br>அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:33</td>
<td>புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.07 அடப்பன்வயல் 3ம் வீதி எதிர்புரம் ICDS Centerல் உள்ள மினி போர் பழுதாகிவிட்டது. இந்த மோட்டாரில் Coil கட்டி பணியை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.47,000/– குடிநீர் பணியாக இருப்பதால் இப்பணியை மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி ஒப்பந்தகாரர் திரு.R.மணிகண்டன்</td>
<td>தீர்மான எண்: 574<br>அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:–</u><br><br>அ) மன்றம் பதிவு செய்யலாம்.<br>ஆ) மேற்படி செலவுத் தொகை குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:34</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2021–2024 ம் ஆண்டு வரை உள்ள மூன்றாண்டு குத்தகையில் 01.04.2021 முதல் 31.03.2022 வரை உள்ள காலத்திற்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 18.02.2021அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் வாரச்சந்தை கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தில் கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட ஏலக்கேள்வி மற்றும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th rowspan="2">வ.எண்</th><th rowspan="2">உரிம இனம்</th><th rowspan="2">ஏலம் கோரியவர்/ ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி</th><th colspan="2">உயர்ந்த பட்ச</th></tr>
<tr><th>ஏலக்கேள்வி (ரூபாயில்)</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை(ரூபாயில்)</th></tr>
<tr><td rowspan="4">1.</td><td rowspan="4">இனம் எண்–1 வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்(எல்லா இனங்களுக்கும் சாணம் எடுத்துக் கொள்ளும் உரிமை உட்பட)</td><td>1.திரு. B. ராஜா த/பெ. V. பாலகிருஷ்ணன், நகரளவு எண். 2074, மேல 5–ம் வீதி, புதுக்கோட்டை.</td><td>–</td><td>36,77,500</td></tr>
<tr><td>2.திரு.K. இஷாந்த்குமார், 2076 மேல 5ம் வீதி, புதுக்கோட்டை.</td><td>36,60,000</td><td>–</td></tr>
<tr><td>3. திரு.V.S. பழனிவேல், த/பெ.KV.சுப்பையா,3 சுப்பலெட்சுமி இல்லம், ஆலங்குடி.</td><td>36,55,000</td><td>–</td></tr>
<tr><td colspan="3"></td></tr>
</table>
<br><u>அலுவலக குறிப்பு</u><br><br>அ) இனம் எண்.01, வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (எல்லா இனங்களுக்கும்</td>
<td>தீர்மான எண்: 575<br>அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

வாரச்சந்தையில் சாணம் எடுத்துக் கொள்ளும் உரிமை ) குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக வரிசை எண்.01 ல் கண்டுள்ள திரு.B.ராஜா த/பெ. V. பாலகிருஷ்ணன், நகரளவு எண். **2074**, மேல **5**–ம் வீதி, புதுக்கோட்டை என்பவர் ரூ**36,77,500./–(** ரூபாய் முப்பத்தி ஆறு லட்சத்து எழுபத்து ஏழாயிரத்து ஐநூறு மட்டும் ) ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.**35,83,897/–** ஐ காட்டிலும் கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.**34,15,944/–** ஐ காட்டிலும் கூடுதலாகவும் உள்ளதால் மேற்படி நபருக்கு உரிமம் வழங்குவதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** ஒப்பந்தப்புள்ளி தொகை அல்லது ஏலக்கேள்வி அதிகம் கேட்ட குத்தகை இனங்களுக்கு தொகை செலுத்தப்பட்டவுடன் குத்தகை உரிமம் சம்மந்தப்பட்ட நபருக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.**302/2021**/அ4)

**பொருள் எண்:35**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2021–2024 ம் ஆண்டு வரை உள்ள மூன்றாண்டு குத்தகையில் 01.04.2021 முதல் 31.03.2022 வரை உள்ள காலத்திற்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 18.02.2021அன்று நடைபெற்ற பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் தினசரிச்சந்தை கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தில் கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட ஏலக்கேள்வி மற்றும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | உரிம இனம் | ஏலம் கோரியவர்/ ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த பட்ச | |
|---|---|---|---|---|
| | | | ஏலக்கேள்வி (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை(ரூபாயில்) |
| 1. | இனம் எண்–02 நகராட்சி நாட்சந்தையில் மற்றும் 1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 270 ஆவது பிரிவின் கீழ் வசூல் செய்யும் உரிமம். | 1.எஸ்.அருண்பிரசாத், த/பெ. சுப்பையா, நகரளவு எண்.4209, கே.எல்.கே.எஸ். நகர், புதுக்கோட்டை. | 7,61,000 | – |
| | | 2.எஸ். ராஜேஷ், த/பெ. U.சிவபுண்ணியம், **2137** மேல **5** ம் வீதி, புதுக்கோட்டை. | 7,60,000 | – |

அலுவலக குறிப்பு

**அ)** இனம் எண்–02 நகராட்சி நாட்சந்தையில் மற்றும் 1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 270 ஆவது பிரிவின் கீழ் வசூல் செய்யும் உரிமம், குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச

**தீர்மான எண்:** 576
**அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

ஏலக்கேள்வி தொகையாக வரிசை எண்.01 ல் கண்டுள்ள எஸ்.அருண்பிரசாத், த/பெ. சுப்பையா, நகரளவு எண்.4209, கே.எல்.கே.எஸ். நகர், புதுக்கோட்டை. என்பவர்ரூ.**7,61,000/–**(ரூபாய் ஏழு லட்சத்து அறுபத்து ஓராயிரம் மட்டும்) ஏலக்கேள்வி அளித்துள்ளார். இந்த ஏலக்கேள்வி தொகை சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.**7,50,803/–** ஐ காட்டிலும் கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.**7,15,617/–**ஐ காட்டிலும் கூடுதலாகவும் உள்ளதால் மேற்படி நபருக்கு உரிமம் வழங்குவதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** ஒப்பந்தப்புள்ளி தொகை அல்லது ஏலக்கேள்வி அதிகம் கேட்ட குத்தகை இனங்களுக்கு தொகை செலுத்தப்பட்டவுடன் குத்தகை உரிமம் சம்மந்தப்பட்ட நபருக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.**302/2021**/அ**4**)

**பொருள் எண்:36**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2021–2024 ம் ஆண்டு வரை உள்ள மூன்றாண்டு குத்தகையில் 01.04.2021 முதல் 31.03.2022 வரை உள்ள காலத்திற்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 18.02.2021அன்று நடைபெற்ற பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் புதிய பேருந்து நிலையம் முதல் பிரிவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தில் கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட ஏலக்கேள்வி மற்றும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | உரிம இனம் | ஏலம் கோரியவர்/ ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த பட்ச | |
|---|---|---|---|---|
| | | | ஏலக்கேள்வி (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை(ரூபாயில்) |
| 1. | இனம் எண்–08 புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கழிப்பிடம் முதல் பிரிவில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1.திரு.எஸ்.மாரிமுத்து, த/பெ.சி.சோமசுந்தரம்,5637 சாந்தநாதபுரம் 6–ம்வீதி, புதுக்கோட்டை. | 22,75,000 | – |
| | | 2.திரு.மு. இளஞ்சேரன், த/பெ. முத்துச்சாமி, 9, ஸ்ரீ மீனாட்சி நகர் கடையக்குடி (Po), புதுக்கோட்டை. | 23,00,000 | – |
| | | 3.திரு. எஸ். முருகன், த/பெ.சிவபெருமாள், 10/6எ, காளியம்மன் கோவில் தெரு, மேட்டுபட்டி, திண்டுக்கல். | 35,00,000 | – |
| | | 4.திரு.ஆர். பாலாஜி கணபதி, த/பெ. ராதா கிருஷ்ணன், 2144, வடக்கு ராஜவீதி, | 35,01,000 | – |

**தீர்மான எண்:** 577
**அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| | | புதுக்கோட்டை. | | |
| | | 5.திரு.எஸ்.கார்த்திகேயன்,<br>த/பெ.சுப்ரமணியன்,<br>48, அடப்பன் வயல் –2 ஆம் வீதி<br>புதுக்கோட்டை. | – | 25,23,000 |
| | | 6.திரு.கே.கண்ணன்,<br>த/பெ.கிருஷ்ணன்,<br>127, தொண்டைமான் நகர்,<br>புதுக்கோட்டை. | – | 27,00,222 |
| | | 7. திரு. எஸ். முருகன்,<br>த/பெ.சிவபெருமாள், 10/6எ,<br>காளியம்மன் கோவில் தெரு,<br>மேட்டுப்பட்டி, திண்டுக்கல். | – | 40,00,500 |

அலுவலக குறிப்பு

**அ)** இனம் எண்–08 புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கழிப்பிடம் முதல் பிரிவில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் , குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக வரிசை எண்.07 ல் கண்டுள்ள திரு. எஸ். முருகன், த/பெ. சிவபெருமாள், 10/6எ, காளியம்மன் கோவில் தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல். என்பவர் ரூ.**40.00,500/–**(ரூபாய் நாற்பது லட்சத்து ஐந்நூறு மட்டும்) ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.**19,23,863/–** ஐ காட்டிலும் கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.**18,33,704/–**ஐ காட்டிலும் கூடுதலாகவும் உள்ளதால் மேற்படி நபருக்கு உரிமம் வழங்குவதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** ஒப்பந்தப்புள்ளி தொகை அல்லது ஏலக்கேள்வி அதிகம் கேட்ட குத்தகை இனங்களுக்கு தொகை செலுத்தப்பட்டவுடன் குத்தகை உரிமம் சம்மந்தப்பட்ட நபருக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.**302/2021**/அ4)

**பொருள் எண்:37**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 31.03.2024 ம் ஆண்டு வரை உள்ள மூன்றாண்டு குத்தகையில் 01.04.2021 முதல் 31.03.2022 வரை உள்ள காலத்திற்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 18.02.2021அன்று நடைபெற்ற பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் புதிய பேருந்து நிலையம் இரண்டாம் பிரிவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தில் கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட ஏலக்கேள்வி மற்றும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | உரிம இனம் | ஏலம் கோரியவர்/ | உயர்ந்த பட்ச |
|---|---|---|---|

**தீர்மான எண்: 578**
**அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

| ண் | | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை(ரூபாயில்) |
|---|---|---|---|---|
| | இனம் எண்–09 புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கழிப்பிடம் இரண்டாம் பிரிவில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1.திரு. எஸ்.மாரிமுத்து , த/பெ.சி.சோமசுந்தரம்,5637 சாந்தநாதபுரம் 6 ம்வீதி , புதுக்கோட்டை. | 10,30,000 | – |
| | | 2.திரு. எஸ். முருகன், த/பெ. சிவபெருமாள், 10/6எ, காளியம்மன் கோவில் தெரு, மேட்டுபட்டி, திண்டுக்கல். | – | 9,26,000 |

அலுவலக குறிப்பு

**அ)** இனம் எண்–09 புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கழிப்பிடம் முதல் பிரிவில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகையாக வரிசை எண்.01 ல் கண்டுள்ள திரு. எஸ்.மாரிமுத்து , த/பெ.சி.சோமசுந்தரம், 5637 சாந்தநாதபுரம் 6 ம்வீதி , புதுக்கோட்டை. என்பவர்ரூ.**10,30,000** (ரூபாய் பத்து லட்சத்து முப்பது ஆயிரம் மட்டும் ) ஏலக்கேள்வி அளித்துள்ளார். இந்த ஏலக்கேள்வி தொகை சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.**8,83,103/–** ஐ காட்டிலும் கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.**8,41,718/–**ஐ காட்டிலும் கூடுதலாகவும் உள்ளதால் மேற்படி நபருக்கு உரிமம் வழங்குவதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** ஒப்பந்தப்புள்ளி தொகை அல்லது ஏலக்கேள்வி அதிகம் கேட்ட குத்தகை இனங்களுக்கு தொகை செலுத்தப்பட்டவுடன் குத்தகை உரிமம் சம்மந்தப்பட்ட நபருக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.302/2021/அ4)**

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:38** | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2021–2024 ம் ஆண்டு வரை உள்ள மூன்றாண்டு குத்தகையில் 01.04.2021 முதல் 31.03.2022 வரை உள்ள காலத்திற்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 18.02.2021அன்று நடைபெற்ற பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் ரொட்டிக்காரச் சந்தில் உள்ள நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தில் கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட ஏலக்கேள்வி மற்றும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்:** 579 அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று **அனுமதிக்கப்பட்டது.** |

| வ.எண் | உரிம இனம் | ஏலம் கோரியவர்/ ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த பட்ச | |
|---|---|---|---|---|
| | | | ஏலக்கேள்வி (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்) |
| 1. | இனம் எண்—11 ரொட்டிக்காரச் சந்தில் உள்ள நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1.திரு.கே.சுப்பிரமணியன், த/பெ.கருப்பையா, எண்.3460, தெற்கு 2 ம் வீதி, புதுக்கோட்டை. | — | 93,000 |
| | | 2.திரு.கே.கண்ணன், த/பெ.கிருஷ்ணன், எண்.127, தொண்டைமான் நகர், புதுக்கோட்டை. | — | 87,000 |

அலுவலக குறிப்பு

**அ)** இனம் எண்—11 ரொட்டிக்காரச் சந்தில் உள்ள நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக வரிசை எண்.01 ல் கண்டுள்ள திரு.கே.சுப்பிரமணியன்,த/பெ.கருப்பையா, எண்.3460, தெற்கு 2 ம் வீதி, புதுக்கோட்டை என்பவர் ரூ.**93,000/—** (ரூபாய் தொண்ணுற்றி மூவாயிரம் மட்டும்) ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.**84,893/—** ஐ காட்டிலும் கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.**80,914/—**ஐ காட்டிலும் கூடுதலாகவும் உள்ளதால் மேற்படி நபருக்கு உரிமம் வழங்குவதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** ஒப்பந்தப்புள்ளி தொகை அல்லது ஏலக்கேள்வி அதிகம் கேட்ட குத்தகை இனங்களுக்கு தொகை செலுத்தப்பட்டவுடன் குத்தகை உரிமம் சம்மந்தப்பட்ட நபருக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.**302/2021**/அ**4)**

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:39** | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2021—2024 ம் ஆண்டு வரை உள்ள மூன்றாண்டு குத்தகையில் 01.04.2021 முதல் 31.03.2022 வரை உள்ள காலத்திற்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 18.02.2021அன்று நடைபெற்ற பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் லாரி | **தீர்மான எண்:** 580 அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று **அனுமதிக்கப்பட்டது.** |

நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தில் கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட ஏலக்கேள்வி மற்றும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | உரிம இனம் | ஏலம் கோரியவர்/ ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த பட்ச | |
|---|---|---|---|---|
| | | | ஏலக்கேள்வி (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்) |
| 1. | இனம் எண்–12 லாரி நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1.திரு.எம்.எஸ்.ரவிச்சந்திரன், எண்.1647, வடக்கு 3 ம் வீதி, புதுக்கோட்டை. | – | 2,11,000 |
| | | 2.திரு.ஆர் . சந்தோஷ், எண்.1647, வடக்கு 3 ம் வீதி, புதுக்கோட்டை. | – | 1,55,000 |

அலுவலக குறிப்பு

**அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்:78**

புதுக்கோட்டை நகராட்சியில் 2020–2021ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 06.03.2020 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1) | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.24 திருவப்பூர் நகராட்சி உயர்நிலை பள்ளியில் முதல் தளத்தில் மூன்று வகுப்பறை கட்டிடம் கட்டுதல். | 13.70 | திரு.சிவக்குமார் , புதுக்கோட்டை. | **1202310.00** | மதிப்பீட்டை வி 0.11 % குறை |
| | | | திரு.குணசேகரண், புதுக்கோட்டை. | **1234881.00** | மதிப்பீட்டை வி 2.53% அதிகப் |

**தீர்மான எண்: 619**
**அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு :–</u><br>மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சிவக்குமார் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.11% குறைவு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். | |
| **பொருள் எண்:79** | புதுக்கோட்டை நகராட்சி தொண்டைமான் நகரில் உள்ள சமுதயாகூடம் பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச செலவினம். ரூ.9,25,000/– மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 620<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:80** | புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிக மழையின் காரணமாக பல இடங்களில் தண்ணீர் தேங்கி உள்ளது. இதனால் போக்குவரத்திற்கு மக்கள் மிகவும் சிரமமாக இருக்கிறது. மேலும் மழைநீர் தேங்கி இருப்பதால் கொசுக்கள் மற்றும் சுகாதார பிரச்சனை ஏற்படாமல் இருக்க சமத்துவபுரம் சாலை, அசோக் நகர், பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அருகில் Wet Mix அடித்து மழைநீர் தேங்காமல் சரிசெய்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4,00,000/– இப்பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்: 621<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:81** | புதுக்கோட்டை நகராட்சிக்குப்பட்ட வார்டு எண். 23 திருவப்பூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் அருகில் சிறுமின் விசை பம்புடன் கூடிய ஆழ்குழாய் கிணறு மற்றும் மினிடேங் இல்லாததால் அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் மற்றும் இதர தண்ணீர் பயன்பாடுகளுக்கு சிரமமாக உள்ளது. எனவே அப்பகுதியில் புதிதாக ஆழ்குழாய் கிணறுடன் கூடிய மினிடேங் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,00,000/– மேலும் இப்பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. | தீர்மான எண்: 622<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| **பொருள் எண்:82** | புதுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான காந்தி பூங்காவில் 20.09.2016–ல் பராமரிப்பு பணிக்காக ஒப்பந்ததாரர் திரு.எம்.சுப்பிரமணியன் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கி பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்தது. அச்சமயத்தில் பூங்காவை பொதுமக்கள் உபயோகத்திற்கு கொண்டுவரவில்லை. மேலும் பராமரிப்பு பணிகள் நடைபெற்றுவருவதால் பொதுமக்கள், சிறுவர்கள், சிறுமியர்கள் தற்காலிகமாக உள்ளே நுழைய தடைவிதிக்கப்பட்டு பெயர்பலகை வைக்கப்பட்டிருந்தது, இந்நிலையில் 26.03.2017 தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிக்கு வடவாளம் முக்கானிப்பட்டி கிராமத்தை சேர்ந்த 9 வயது பெண்குழந்தை எஸ்.எஸ்தர் அவருடைய அப்பா ஸ்டீபன் மற்றும் ஸ்டீபன் மகன் ஆகிய மூன்று பேரும் அனுமதி இல்லாமல் பூங்காவில் நுழைந்து பின்னர் மூவரும் வெளியேறும் போது பூங்கா வாயில் பராமரிப்பில் உள்ள இரும்பு கதவை பிடித்து விளையாடுகையில் சிறுமி எஸ்.எஸ்தர் மேல் கதவு விழுந்து விட்டது. இதனால் அந்த 9 வயது சிறுமியை அவரது தந்தையால் மருத்துவமனை கொண்டு சென்று பின்னர் குழந்தை மருத்துவமனையில் இறந்துவிட்டார் என தெரியவருகிறது. நகர காவல் நிலையத்தில் F.I.R. பதிவு செய்யப்பட்டது .இது தொடர்பான அறிக்கை ந.க.எண்.3156/2017/இ1 நாள்.26.03.2017இல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் , புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. பூங்கா பராமரிப்பு பணி நடைபெற்று வந்த நிலையில் யாரும் நுழையக்கூடாது என தகவல் பலகை வைக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து அறிக்கை சமர்ப்பிக்க இளநிலைப்பொறியாளருக்கு 27.06.2017 அன்று குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரருக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் சிறுமி இறந்தவுடன் அரசு மருத்துவமனைக்கு சென்று சிறுமி இறந்த விபரங்கள் நேரடியாக அறிந்து இழப்பீடு தொகையாக சிறுமியின் தந்தையிடம் புதுக்கோட்டை நகராட்சி சார்பாக ரூ.50,000/–அதன் பிறகு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூலம் முதல்வர் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ.1.00 இலட்சம் ஆகியவை வழங்கப்பட்டது. ( வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை , பேரிடர் மேலாண்மை அலகு பே.மே.(1 (1) ) பிரிவு அரசாணை(1 டி) எண்.343 நாள்.26.07.2017.)<br>மேலும் சிறுமியின் தந்தை திரு. ஸ்டீபன் சவரிமுத்து மாவட்ட நுகர்வோர் குறைதீர்மன்றம் புதுக்கோட்டையில் வழக்கு தொடந்து வழக்கின் தீர்ப்பில் சி.சி.எண்.09/2017, நாள்.30.08.2019 தீர்ப்பின் படி புகார்தாரருக்கு இழப்பீடு தொகையாக ரூ. 5.00 இலட்சம் மற்றும் வழக்கு கட்டணம் ரூ.5000 வழங்க தீர்ப்பு | தீர்மான எண்: 623<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்படி இழப்பீட்டுத் தொகையினை சிறுமியின் தந்தைக்கு வழங்க சட்ட கருத்துரு பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாநில நுகர்வோர் குறைதீர் மன்றம் அப்பீல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. கொரோனா காலம் என்பதால் உடனே முடியவில்லை என மதுரை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்கள்<br>மேலும், இது குறித்து நகராட்சி வழக்கறிஞர் வழங்கப்பட்ட சட்ட கருத்துருவில் மாவட்ட நுகர்வோர் குறைதீர்மன்றம் புதுக்கோட்டையில் வழக்கு தொடந்து வழக்கின் தீர்ப்பில் சி.சி.எண்.09/2017, நாள்.30.08.2019 தீர்ப்பின் படி புகார்தாரருக்கு இழப்பீடு தொகையாக ரூ. 5.00 இலட்சம் மற்றும் வழக்கு கட்டணம் ரூ.5000/– வழங்க தீர்ப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி தொகையை அன்னவருக்கு வழங்க தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் இழப்பீடு தொகை ரூ.5,05,000/– வழங்க மன்றத்தின் வேண்டப்படுகிறது. .<br>**<u>அலுவலகுறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவுத் தொகை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (3156/2017/இ1) | |

| | | |
|---|---|---|
| பொருள் எண்:83 | புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 உசிலங்குளம் 8ம் வீதியில் உள்ள ஆழ்குழாய் கிணறுடன் கூடிய மினிடேங்கில் உள்ள மின் மோட்டார், பேனல் போர்டு மற்றும் பிளாஸ்டிக் முற்றிலும் பழுதடைந்து இயங்கவில்லை. இதனால் அப்பகுதி பொது மக்களுக்கு குடிநீர் மற்றும் இதர தண்ணீர் பயன்பாடுகளுக்கு சிரமமாக உள்ளது. எனவே பழுதடைந்த மின் மோட்டார் மற்றும் பிளாஸ்டிக் டேங்கை புதிதாக மாற்றி பழுது நீக்கம் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.46,000/–க்கு மேலும் குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியை நகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி ஒப்பந்தகாரர் திரு.R.மணிகண்டன் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>அ) மன்றம் பதிவு செய்யலாம்.<br>ஆ) மேற்படி செலவுத் தொகை குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 624<br>அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்:84 | புதுக்கோட்டை நகராட்சி திருவப்பூர் மாரியம்மன் கோவில் திருவிழா நடைபெற உள்ளது. இந்த மாரியம்மன் கோவில் திருவிழாவிற்கு அதிகமான மக்கள் கலந்துகொள்வார்கள். விழாவிற்கு வரும் பக்தர்களுக்கு சுகாதார வசதிகள் , ஆண்கள், பெண்களுக்கு கழிவறை வசதி அமைத்து கொடுக்க வேண்டும். எனவே இப்பணியை மேற்கொள்ள புதியதாக கழிவறை வசதி அமைத்து கொடுக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.97,000/– இப்பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்வதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 625<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்:85 | நகராட்சி வார்டு எண்: 24க்குட்பட்ட திருவப்பூர் ரயில்வே குட்ஷெட் ரோடு பகுதியில் பாதாள சாக்கடை குழாய் அடைப்பு ஏற்பட்டு ஆள்நுழைவு தொட்டியிலும் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் கழிவு நீர் சாலையில் செல்கிறது.<br>மேற்படி பாதாளச் சாக்கடை குழாய் உடைப்பு பணியினை உடன் சரி செய்ய தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்படைப்பு பணியாக திரு.எம்.ஜம்புலிங்கம் ஒப்பநததார் வசம் ஒப்படைத்து பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | தீர்மான எண்: 626<br>பதிவு செய்யப்பட்டது. |

<table>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்:86</td><td>புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:1 முதல் 42 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் இணைப்புகள் Internal Plumbing முறையில் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி இணைப்புகளுக்குண்டான தொகையினை 10 சம தவணையில் பொதுமக்களிடமிருந்து வசூல் செய்திடவும், மேற்படி இணைப்புகளுக்கான குழாய் பதித்தல் அளவீடுகளும் மற்றும் அதற்குண்டான தொகைகளும் கீழ்கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை கணினியில் உள்ளீடு செய்து சம்மந்தப்பட்ட வரிவிதிப்பாளர்களிடமிருந்து வசூல் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<table>
<tr><td>Sl. No.</td><td>Road Type</td><td>Pipeline Length Details</td><td>Internal Plumbing Charges</td></tr>
<tr><td>1</td><td>BT</td><td>0 Meter to 6 Meter</td><td>Rs.3210/-</td></tr>
<tr><td>2</td><td>CC</td><td>0 Meter to 6 Meter</td><td>Rs.3212/-</td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
</table>
<br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பட்டியலை கணினியில் உள்ளீடு செய்யப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:19964/2009/இ1)</td><td>தீர்மான எண்: 627<br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்:87</td><td>புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்:24 திருவப்பூர் பகுதியில் உள்ள நகராட்சி தாய் சேய் நல மையத்தில் அம்மா மினி கிளினிக் அமைக்க தேவையான அடிப்படை வசதிகள், கட்டிட பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,90,000/-க்கும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவு செய்யவும் மேற்படி பணியை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் Royal Construction மூலம் மதிப்பீடு விலை விகிதத்தில் பணியை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் (இ1/2568/2020)</td><td>தீர்மான எண்: 628<br>பதிவு செய்யப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்:88</td>
<td>
புதுக்கோட்டை நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. அதன்படி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வீடு வீடாக சென்று விழிப்புணர்வு நோட்டீஸ் வழங்கவும், மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் டெங்கு கொசு உற்பத்தியாகும் இடங்கள் தொடர்பான விளக்கப்படங்கள், வருடாந்திர காலண்டர்கள் அடங்கிய மல்டிகலர் ஸ்டிக்கர் ஆகியவைகள் அச்சடிக்க 09.12.2020ம் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதற்கு கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>Jeyam Offset Printers (Nos-1)</th><th>Sri Guru Krupa Computer Printers (Nos-1)</th><th>MRM Binding & Printing (Nos-1)</th></tr>
<tr><td>1.</td><td>டெங்கு கொசு முட்டையிடும் இடங்கள் தொடர்பான விளக்கப்படங்கள் மற்றும் வாசகங்கள் அடங்கிய Crown Size மல்டி கலர் ஸ்டிக்கர் ஒரு பக்கம் அச்சடிக்க.</td><td>20/-</td><td>21/-</td><td>22/-</td></tr>
<tr><td>2.</td><td>டெங்கு கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிதல் வருடாந்திர காலண்டர் A4-Size மல்டி கலர் ஸ்டிக்கர் ஒரு பக்கம் அச்சடிக்க.</td><td>12/-</td><td>14/-</td><td>13/-</td></tr>
<tr><td>3.</td><td>டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு நோட்டீஸ் A4-Size ( Front & Back)</td><td>1.20/-</td><td>1.30/-</td><td>1.50/-</td></tr>
<tr><td>4.</td><td>டெங்கு கொசு இல்லா வீடு ( Smileys Sticker ) Demmy 1x 16 Size - மல்டி கலர் ஸ்டிக்கர் + லேமினேசன் ஒரு பக்கம் அச்சடிக்க.</td><td>3.00/-</td><td>4.00/-</td><td>5.00/-</td></tr>
</table>

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மற்றும் மேற்படி பணிக்கு உத்தேச செலவுத் தொகை ரூ. 5,00,000/– க்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>..

அ . மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Jeyam Offset Printers. நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ஆ. டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு விழிப்புணர்வு அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று
</td>
<td>தீர்மான எண்: 629<br>அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Jeyam Offset Printers நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் பதிவு செய்யலாம். (8086/2020/H2)

**பொருள் எண்:89**

புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 42 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. கொரோனா நோய்த்தொற்று தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு அடங்கிய மக்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் அடங்கிய விழிப்புணர்வு மல்டி கலர் நோட்டீஸ் மற்றும் ஸ்டிக்கர் அச்சடிக்க 23.12.2020ல் விலைப்புள்ளி கோரியதற்கு கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | Jeyam Offset Printers (Nos-1) | Sri Guru Krupa Computer Printers (Nos-1) | MRM Binding & Printing (Nos-1) |
|---|---|---|---|---|
| 1. | கொரோனா அறிகுறி பரவும் விதம், தடுப்பு நடவடிக்கைகள், சிகிச்சை முறை அடங்கிய A4-Size மல்டி கலர் நோட்டீஸ் | 1.50/- | 1.60/- | 1.70/- |
| 2. | கொரோனா பரவும் விதம், மற்றும் சிகிச்சை முறைகள் படங்கள் அடங்கிய A4-Size மல்டி கலர் நோட்டீஸ் | 1.50/- | 1.60/- | 1.70/- |
| 3. | HIV AIDS உள்ளவர்களுக்கான அறிவுரை A4-Size ( Front & Back ) மல்டி கலர் நோட்டீஸ் | 1.80/- | 1.90/- | 2.00/- |
| 4. | கொரோனா தொற்று உள்ள குழந்தைகளின் பெற்றோர்களுக்காக விழிப்புணர்வு அறிவுரை Crown 1x2 ( Front & Back ) மல்டி கலர் நோட்டீஸ் | 3.00/- | 4.00/- | 5.00/- |
| 5. | சிறுநீரக நோயாளிகளுக்கான கொரோனா தொற்று விழிப்புணர்வு அறிவுரை Crown 1x2 ( Front & Back ) மல்டி கலர் நோட்டீஸ் | 3.00/- | 4.00/- | 5.00/- |
| 6. | மனநோய் , மன அழுத்தம் உள்ள நோயாளிகளுக்கான கொரோனா தொற்று விழிப்புணர்வு அறிவுரை Crown 1x2 ( Front & Back ) மல்டி கலர் நோட்டீஸ் | 3.00/- | 4.00/- | 5.00/- |
| 7. | முதியோர்களுக்கான கொரோனா தொற்று விழிப்புணர்வு | 3.00/- | 4.00/- | 5.00/- |

தீர்மான எண்: 630
அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிவுரை Crown 1x2 ( Front & Back ) மல்டி கலர் நோட்டீஸ் | | | |
| 8. | கொரோனா தொற்று தொடர்பாக பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய விழிப்புணர்வு Crown Size மல்டி கலர் ஸ்டிக்கர். | 25/- | 26/- | 27/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மற்றும் மேற்படி பணிக்கு உத்தேச செலவுத்தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..**

அ . மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Jeyam Offset Printers. நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ஆ. கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு விழிப்புணர்வு அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Jeyam Offset Printers நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் பதிவு செய்யலாம். (8600/2020/H2)

**பொருள் எண்:90**

இந்நகராட்சிக்கு சொந்தமான திருக்கோகர்ணம் இராமலிங்கத்தெருவில் கட்டப்பட்டுள்ள மேல்தளக்கட்டிடக்கடை எண். 06 மற்றும் 07 மற்றும் நகராட்சி புதிய அலுவலகம் கீழ்புறம் கட்டப்பட்டுள்ள கடை எண்.14 –க்கு 23.02.2021 ல் கோரப்பட்ட பொதுஏல / ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக்கொண்டுள்ளவர்கள் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ. எண் | இனம் எண் | பெயர் மற்றும் முகவரி | 22.02.2021–ல் பெறப்பட்ட முன்வைப்புத்தொகை | 23.02.2021–ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட மாத வாடகைத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | திருக்கோகர்ணம் இராமலிங்கத்தெரு கட்டப்பட்டுள்ள மேல்தளக்கடைகள் கடை எண்.06 | சி.சேதுமாதவன், த/பெ. சிட்டிபாபு, எண்.1091/2, வடக்கு 4 –ஆம் வீதி, புதுக்கோட்டை. | ரூ.75,000 டிடி எண்.012376 IDBI-Bank. தேதி. 18.02.2021 | ரூ. 1100 /– |
| 2. | திருக்கோகர்ணம் இராமலிங்கத்தெரு | திருமதி.சீ.சபிதாதேவி, க/பெ.சீனிவாசன், | ரூ.75,000 டிடி எண்.012885 | ரூ.1000 /– |

**தீர்மான எண்: 631**
அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டப்பட்டுள்ள மேல்தளக்கடைகள் கடை எண்.06 | எண்.1091/2, வடக்கு 4 –ஆம் வீதி, புதுக்கோட்டை. | Central Co-Op-Bank தேதி. 19.02.2021 | |
| 3. | திருக்கோகர்ணம் இராமலிங்கத்தெரு கட்டப்பட்டுள்ள மேல்தளக்கடைகள் கடை எண்.07 | பை.ஹிஷாம் முகமது, த/பெ.பைஜீர் ரஹ்மான், எண்.17, அப்துல் ரஹ்மான் தெரு, குளத்துார் தாலுகா, புதுக்கோட்டை. | ரூ.75,000 டிடி எண்.382131 Canara -Bank தேதி.22 .02.2021 | ரூ.1150/– |
| 4. | திருக்கோகர்ணம் இராமலிங்கத்தெரு கட்டப்பட்டுள்ள மேல்தளக்கடைகள் கடை எண்.07 | பை. சபீனா பேகம் க/பெ. பைஜீர் ரஹ்மான், எண்.17, அப்துல் ரஹ்மான் தெரு, குளத்துார் தாலுகா, புதுக்கோட்டை. | ரூ.75,000 டிடி எண்.382132 Canara -Bank தேதி.22 .02.2021 | ரூ. 1050 /– |
| 5. | புதிய நகராட்சி அலுவலக கீழ்புறம் கட்டிடக்கடைகள் கடை எண்.14 | எம்.சிங்கபாட்ஷா, த/பெ.மலைச்சாமி, நகரளவு எண்.5666, சாந்தநாதபுரம் 1 –ஆம் வீதி, புதுக்கோட்டை. | ரூ.2,00,000 No.000072 , ELITE –Bank, தேதி.22.02.2021. | ரூ.2000 /– |

மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) வரிசை எண்.01 மற்றும் 03 –ல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளித்தாரர்கள், கடை எண்கள்.06 மற்றும் 07 –க்கு உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி வாடகைத்தொகை கோரியுள்ளதால் அவர்களுக்கு மாதவாடகைக்கு உரிம உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

ஆ) வரிசை எண்.05 –ல் கண்டுள்ள ஒருவர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே நகராட்சி நிதி இழப்பு ஏற்படா வண்ணம் உரிம உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். (Roc.No.16707/2016/A4)

**பொருள் எண்:91**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வாட்ஸ்அப் வழி செய்தியின் மூலம், வருகின்ற 25.11.2020 அன்று நிவர் புயல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் வேகமாக தாக்க உள்ளதால் , முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தேவையான கிருமி நாசினிகள் பிளீச்சிங்பவுடர் ( 33.3% குளோரின் தன்மையுடடையது ) , நீர்த்த சுண்ணாம்பு கொள்முதல் செய்ய 23.11.2020ம் தேதியில் விலைப்புள்ளி கோரியதற்கு கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் விபரம் | பிளீச்சிங் பவுடர் விலைப்புள்ளி தொகை 1 கிலோ | நீர்த்த சுண்ணாம்பு விலைப்புள்ளி தொகை 1 கிலோ |
|---|---|---|---|
| 1 | ஹரிணி ஏஜென்சீஸ் ,<br>24/8 D3, செட்டிக்குளம் தெரு,<br>4வது குறுக்கு, கோட்டை,<br>நாமக்கல். | ரூ. 45/– | ரூ. 9/– |
| 3. | அப்துல்லா ஏஜென்சீஸ்<br>64/221, பாலக்கரை மெயின் ரோடு,<br>திருச்சி. | ரூ. 52/– | ரூ. 10/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மற்றும் மேற்படி பணிக்கு உத்தேச செலவுத் தொகை ரூ. 6,38,000/– க்கும் மன்றத்திற்கு பார்வைக்கும், பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு..**

அ. மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஹரிணி ஏஜென்சீஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ஆ. நிவர் புயல் காரணமாக அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஹரிணி ஏஜென்சீஸ் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும், மேற்கண்ட செலவினங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்: 632**
அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்:92**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வாட்ஸ்அப் வழி செய்தியின் மூலம், வருகின்ற 25.11.2020 அன்று நிவர் புயல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் வேகமாக தாக்க உள்ளதால் , இந்நகராட்சியில் பணிபுரியும் சுகாதார ஆய்வாளர்கள், தூய்மை பணியாளர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், நீர்நிலைய காவலர்கள், எலக்ட்ரீசியன்கள், மின்கம்பி உதவியாளர்கள், குழாய் பொருத்துநர்கள், லாரி துலக்குநர்கள் மற்றும் கேங்க் மஸ்தூர்கள் ஆகியோர்களுக்கு கீழ்க்கண்ட மழை அங்கிகள் கொள்முதல் செய்ய

**தீர்மான எண்: 633**
அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

23.11.2020ம் தேதியில் விலைப்புள்ளி கோரியதற்கு கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் விபரம் | Rain Coat ( Full Coat ) | Rain Coat ( Pant & Coat ) |
|---|---|---|---|
| 1 | ஹரிணி ஏஜென்சீஸ் ,<br>24/8 D3, செட்டிக்குளம் தெரு,<br>4வது குறுக்கு, கோட்டை,<br>நாமக்கல். | ரூ. 1350/– | ரூ. 1410/– |
| 3. | ஹர்வி இம்பக்ஸ்,<br>42, Sri APR வீரமலை நகர்,<br>பூண்டி, மாத்தூர்,<br>மதுரை. | ரூ. 1290/– | ரூ. 1340/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மற்றும் மேற்படி பணிக்கு உத்தேச செலவுத் தொகை ரூ. 4,10,000/– க்கும் மன்றத்திற்கு பார்வைக்கும், பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>..

அ. மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஹர்வி இம்பக்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ஆ. நிவர் புயல் காரணமாக அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஹர்வி இம்பக்ஸ், நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும், மேற்கண்ட செலவினங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்:93**

புதுக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பொது கழிப்பிடம் மற்றும் சுகாதார வளாகத்தினை தூய்மை செய்ய தேவையான வாசனை பினாயில், மாப்பு கட்டை, ஒட்டடை சுத்தம் செய்யும் கம்பி, விளக்குமாறு ஆகியவை கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.1.50 இலட்சத்திற்கும், விலைப்புள்ளி அறிவிப்பு கோரவும் மன்ற அனுமதிக்கு.

<u>அலுவலககுறிப்பு</u>..

அ. மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று

தீர்மான எண்: 634
அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| **பொருள் எண்:94** | புதுக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பொது கழிப்பிடம் மற்றும் சுகாதார வளாகத்தினை தூய்மை செய்ய தேவையான வாசனை பினாயில், மாப்பு கட்டை, ஒட்டடை சுத்தம் செய்யும் கம்பி, விளக்குமாறு ஆகியவை கொள்முதல் செய்ய 18.02.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் 1. Shree Trading and Agencies , 2. Sri Shabhari Chemicals Pvt.ltd., 3. VRM Clusters Pvt.ltd., விலைவிகிதத்தின்படி, குறைவான விலைவிகிதம் அளித்துள்ள Shree Trading and Agencies நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு..**<br>வரப்பெற்ற விலைப்புள்ளிகளில், ஒப்பு நோக்கு பட்டியலின்படி, குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Shree Trading and Agencies நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 635<br>அலுவலக குறிப்பு ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:95** | புதுக்கோட்டை நகராட்சி பொது சுகாதார துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான தளவாட சாமான்கள் கொள்முதல் செய்ய 19.02.2021ம் தேதியில் ஒப்பந்த புள்ளிகள் கோரியதற்கு 1. ஹரிணி ஏஜென்சிஸ், நாமக்கல் 2. அப்துல்லா ஏஜென்சிஸ், திருச்சி ஆகிய நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்ட விலைவிகிதத்தின்படி, குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள ஹரிணி ஏஜென்சிஸ், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஒப்புநோக்கு பட்டியலின்படி, ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு..**<br>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியலின்படி, குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள ஹரிணி ஏஜென்சிஸ், நாமக்கல் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 636<br>அலுவலக குறிப்பு ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:96** | புதுக்கோட்டை நகராட்சி பொது சுகாதார நோய்த்தடுப்பு பணிக்கு தேவையான பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களான ஒளிரும் சட்டை, ஒளிரும் தொப்பி, கையுறை, காலுறை, முகவுறை ஆகியவை கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.9.50 இலட்சத்திற்கும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரவும் மன்ற அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு..</u>**<br>அ. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ. பொதுசுகாதார நோய்த்தடுப்பு மற்றும் துப்புரவு பணியாளர்களின் பாதுகாப்பு பணி அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 637<br>அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:97** | புதுக்கோட்டை நகராட்சி பொது சுகதார பிரிவு துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான தளவாட சாமான்கள் கொள்முதல் செய்யவும், அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரவும் உத்தேச செலவுத்தொகை ரூ. 9.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு..</u>**<br>அ. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ. பொது சுகாதார நோய் தடுப்பு அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 638<br>அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:98** | புதுக்கோட்டை நகராட்சியில் கடந்த **16.11.2018** ம் தேதியன்று கஜாபுயல் ஏற்பட்டு நகராட்சி பகுதிகளில் மரங்களின் இயல்புநிலை பாதிப்பு ஏற்பட்டு நகராட்சி அனைத்து பகுதிகளில் நகர் முழுவதும் மரங்கள் வேருடன் சாய்ந்து, மின்சாரம் தடைபட்டு பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் புதுக்கோட்டை நகரத்தை இயல்புநிலைக்கு கொண்டு வருவதற்கு பல்வேறு நகராட்சிகளிலிருந்து **20.11.2018** முதல் ஒரு மாத காலத்திற்கு நமது நகராட்சி பகுதியில் சுகாதாரப்பணிகள் மற்றும் மரங்களை அப்புறப்படுத்தும் பணிகள் மின்சாரத்தை சீர் செய்யும் பணிகள் போர்கால அடிப்படையில் நடைபெற்றன. மேற்படி பணியினை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்கள் தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உத்தரவின்படியும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆலோசனையின்படியும் | தீர்மான எண்: 639<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>மேற்கண்ட பணியாளர்களுக்கு உணவு திருமணமண்டபங்களில் சமையல் செய்து (சைவம் மற்றும் அசைவம்) வழங்குவதற்கும் 21.11.2018 ம் தேதி ரூ.3,00,000/— மற்றும் தேதி.27.11.2018 மொத்தம் 6,00,000/— (ஆறு லட்சம்) முன் பணம் வழங்கப்பட்டது.<br><br>மேலும் திரு.ஜே.காந்தி வருவாய் அலுவலர் தனக்கு வழங்கிய ரூ.6,00,000/— க்கு முன் பணத்திற்கு கூடுதலாக ரூ.25,640/—( இருப்பத்தயிந்தாயிரத்து அறநூற்று நாற்பது ) துப்புரவு பணியாளர்களுக்கு காலை டிபன் மதியம் மட்டன் சாப்பாடு, முட்டை, சிக்கன் போன்ற சாப்பாடுகள் (சுழற்றி முறையில்) பலசரக்கு, காய்கறி , பால், சாப்பாடு தட்டு, மட்டன், சிக்கன், முட்டை போன்ற பொருட்கள் வாங்கி சமையல் செய்து வழங்கியதற்கும். வெளியூர் பணியயளர்களுக்கு பேருந்துகள் வாடகைக்கு எடுத்து அவர்களின் சொந்த ஊருக்கு அனுப்பி வைத்த வகையில் செலவு செய்துள்ளதாக தெரிவித்து என்னால் கூடுதலாக செலவு செய்த தொகை ரூ.5,25,640/— தனக்கு திரும்ப வழங்க கோரியுள்ளார்.<br><br><u>அலுவலக குறிப்பு ..</u><br><br>மேற்கண்ட தொகைகள் செலவு செய்தற்கு தொகைகளுக்கு ஆணையர்அவர்களால் ஆய்வு செய்து சரிபார்க்கப்பட்டது.<br><br>மேற்கண்ட ரூ.6,25,640/— செலவீனம் செய்தற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>திரு.ஜே.காந்தி வருவாய் அலுவலர் மேற்கண்ட தொகைகள் செலவு செய்தற்கு 2018—2019 முன் பண பதிவேடு பக்கம் 4 மற்றும் பக்கம் 5 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. முன் பணமாக ரூ.3 லட்சம் + 3 லட்சம் 21.11.2018 மற்றும் 27.11.2018 தேதிகளில் பெறப்பட்டதற்கு மேற்கண்ட தொகை 6 லட்சத்திற்கு முன் பணம் பதிவேட்டில் ஈடு செய்யலாம் ரூ.25,640/— மீதமுள்ள தொகையினை திரு.ஜே.காந்தி வருவாய் அலுவலருக்கு திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.10930/2018/பி4</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:99</td>
<td>புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 42 வார்டுகளிலும் துப்புரவு பணி மேற்கொள்ளும் சுகாதார பணியாளர்களுக்கு கொரோனா நோய் தொற்று ஏற்படாமல் இருக்க முக கவசம் (3 Layer Mask) அவசரம் அவசியம் கருதி உடனுக்குடன் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளதால், மேற்கண்ட செலவினங்கள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ள வேண்டியிருந்ததால், 80,000 எண்ணிக்கை முக கவசம் (3 Layer Mask) கொள்முதல் செய்ய 18.02.2021ம் தேதி விலைப்புள்ளி கோரியதற்கு கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><td>வ.எண்</td><td>பெயர் மற்றும் முகவரி</td><td>எண்ணிக்கை</td><td>விலைப்புள்ளி தொகை ரூ</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்: 640<br>அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ தாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட்,<br>4, பூங்கா நகர்,<br>சூளிஸ்வரன்பட்டி,<br>பொள்ளாச்சி. | 1 | 9.00/- |
| 2. | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங்,<br>9/5–1, பஜார் தெரு,<br>அய்யம்பாளையம்,<br>திண்டுக்கல். | 1 | 5.00/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மற்றும் மேற்படி பணிக்கு உத்தேச செலவுத் தொகை ரூ. 4,20,000/–க்கும் மன்றத்திற்கு பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>..

அ. மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ. கொரோனா வைரஸ் தொற்றுநோய் தடுப்பு அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங், நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும், மேற்கண்ட செலவினங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்:100**

புதுக்கோட்டை நகராட்சியில் **2019–2020**ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள **27.05.2020** அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1) | புதுக்கோட்டை நகராட்சி திருவப்பூர் ரயில்வே கேட், அம்மையாப்பட்டி நீரேற்று நிலையம், மச்சுவாடி OHT ஆகிய இடங்களில் | **2.76** | People Chemical Industries, Theni | 221140.00 | மதிப்பீட்டை விட 0.03 % குறைவு |
| | | | Shri Sathya dyes and Chemicals, Theni | 226700.00 | மதிப்பீட்டை விட 2.43% அதிகம் |

**தீர்மான எண்: 641**
**அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குளோரிநேசன் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குளோரிநேசன் திருவப்பூர் ரயில்வே கேட் மோட்டார் 30 LPH Flow Control பழுது நீக்கம் செய்தல். | | | | |

**<u>அலுவலக குறிப்பு :—</u>**

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் People Chemical Industries, Theni, ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.03% குறைவு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

---

**பொருள் எண்:101**

புதுக்கோட்டை நகராட்சியில் 2021—2022ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 11.02.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1) | புதுக்கோட்டை நகராட்சி மச்சுவாடியில் உள்ள உயர்மட்ட நீர்தேக்க தொட்டி மற்றும் தரைமட்ட தொட்டியில் உள்ள LiQuied Clorination valve மற்றும் Clorination சுற்றி Fenshing செய்தல். | 3.15 | People Chemical Industries, Theni | 278332.00 | மதிப்பீட்டை விட 0.02 % குறைவு |
| | | | Shri Sathya dyes and Chemicals, Theni | 281340.00 | மதிப்பீட்டை விட 1.05% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு :—</u>**

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் People Chemical Industries, Theni, ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.02% குறைவு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 642**
அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:102** | புதுக்கோட்டை நகராட்சி மச்சுவாடியில் உயர்மட்ட நீர்தேக்க தொட்டி மற்றும் தரைமட்ட தொட்டி உள்ளது. இந்த மச்சுவாடியில் Water Clorination பணி செய்யப்பட்டுவருகிறது. இங்கு உள்ள குளோரின் Machine –யில் பழுது ஏற்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தில் குநஉேபைே, சுற்றி அமைக்கவும், Injecetion valve, பழுதாகிவிட்டது. Pump with Motor பழுதாகிவிட்டது மற்றும் இதர பழுதுகளை நீக்கிட உத்தேச செலவினம் ரூ.2,80,000/– GST 12, ரூ.3,15,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்படி செலவுத் தொகை குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 643 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:103** | புதுக்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோகம் குளோரிநேசன் நடைபெற்று வருகிறது. திருவப்பூர் ரயில்வே கேட், அம்மையாபட்டி நீரேற்று நிலையம் மற்றும் மச்சுவாடி OHT ஆகிய இடங்களில் குளோரிநேசன் செய்யப்பட்டு குடிநீரு் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த குளோரிநேசன் திருவப்பூர் ரயில்வே கேட் மோட்டார் 30 LPH Flow Control பழுதாகிவிட்டது. இதில் புதிய மோட்டார் பொருத்தவும் மற்றும் அம்மையாபட்டி ஆயில் மாற்றவும் மற்றும் சில பணிகள் பழுது பார்க்கவும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2,76,000/- மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 644 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:104** | புதுக்கோட்டை நகராட்சியின் 2019-2020 ஆண்டிற்குரிய கணக்குகள் வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, கல்வி நிதி ஆகியவை தயார் செய்யப்பட்டு 02.04.2020ல் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறைக்கு அனுப்பப்பட்டது. மேற்படி கணக்கில் உள்ள குறைபாடுகளை சரி செய்ய திரு.அ. லெட்சுமணன் என்பவர் மூலம் சரி செய்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டதற்கு உண்டான செலவினம் ரூ.45000/-ம் திரு.அ. லெட்சுமணன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு:மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 645 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>பொருள் எண்:105</td><td>
இந்நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை அடைப்பு அகற்றும் (Jet Rodding Machine) வாகனம் டி.என்.55ஏபி 7600 வாகனத்தில் Thermo Plastic Jetting hose 130 மீட்டர் மற்றும் Jetting Hose Nozzle 2 Nos புதிதாக மாற்றிட கீழ்கண்டுள்ள நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><td>வ. எண்</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>விலைப்புள்ளி விகிதம்</td></tr>
<tr><td>1.</td><td>M/s. Bharath Industries 5 Kasthuripalayam Road, MGR Nagar, Kuttaithottam Jothipuram, Coimbatore 641 047</td><td>Rs. 3,65,152/-</td></tr>
<tr><td>2.</td><td>M/s. SMS Enviro Engieers and Infrastrucuture, 90 1th Street Krishnapuram, Saravanampatti Post, Coimbatore 641 035</td><td>Rs.3,46,920/-</td></tr>
<tr><td>3.</td><td>M/s. Whale Enterprise Private Limited, 1/1D Villankurichi Road, Near Senthottam, Kalappatti Coimbatore 641 048</td><td>Rs.3,23,741/-</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு:<br>
1. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. Whale Enterprise Private Limited, 1/1D Villankurichi Road, Near Sethottam, Kalapatti, Coimbatore நிறுவனத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்ற வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
</td><td>தீர்மான எண்: 646<br>அலுவலக குறிப்பு 1 2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:106** | **பொருள் எண்: 106**<br><br>புதுக்கோட்டை நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோய்கள் பொதுமக்களுக்கு வராமல் தடுக்க , பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையம், பூங்காக்கள், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றில் லெமன் கிராஸ் ஆயில் (Lemon Grass Oil) தினந்தோறும் தெளிக்க வேண்டியிருப்பதால் லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்ய 27.01.2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் நிறுவனத்தின் மூலம் 400 லிட்டர் லெமன் கிராஸ் ஆயில் கூடுதலாக கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.9.40 இலட்சத்திற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு..**<br>பொது சுகாதார நோய்த்தடுப்பு அவசர அவசியம் கருதி ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் நிறுவனத்தின் மூலம் 400லிட்டர் லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 647<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:107** | புதுக்கோட்டை நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் நபர்கள் உள்ள வீடு , தெருக்கள் மேலும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையம், பூங்காக்கள் , அரசு அலுவலகங்கள் மற்றும் நகரில் உள்ள அனைத்து வீடுகளிலும் லைசால் தினந்தோறும் தெளிக்க வேண்டியிருப்பதால் லைசால் (Lyzol ) கொள்முதல் செய்ய 29.01.2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ தாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட் நிறுவனத்தின் மூலம் 4000லிட்டர் லைசால் (Lyzol ) கூடுதலாக கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ. 9,44,000/– மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண்: 648<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு..**<br><br>பொது சுகாதார கொரோனா வைரஸ் தொற்று நோய்த்தடுப்பு அவசர அவசியம் கருதி ஸ்ரீ தாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட் நிறுவனத்தின் மூலம் 4000 லிட்டர் லைசால் (Lyzol ) கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | |
| **பொருள் எண்:108** | புதுக்கோட்டை நகராட்சி பொது சுகாதார நோய்த்தடுப்பு பணிக்கு தேவையான பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களான ஒளிரும் சட்டை, ஒளிரும் தொப்பி, கையுறை, காலுறை, முகவுறை ஆகியவை கொள்முதல் செய்வதற்கு 19.02.2021ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 1. அப்துல்லா ஏஜென்சிஸ், திருச்சி 2. ஹரிணி ஏஜென்சிஸ், நாமக்கல் கொடுத்துள்ள விலைவிகிதத்தின்படி, குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஹரிணி ஏஜென்சிஸ், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு..**<br>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியலின்படி, குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள ஹரிணி ஏஜென்சீஸ் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 649<br>அலுவலக குறிப்பு ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:109** | நகராட்சிக்கு உட்பட்ட வார்டு 41இல் கோல்டன்நகரில் புதியதாக பகிர்மான குழாய் அமைத்திட ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.9.15 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை 2020-2021ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் செலவிட அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 650<br>அலுவலக குறிப்பு 1 2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:110** | நகராட்சிக்கு உட்பட்ட கோவில்பட்டியில் உள்ள OHT இருந்து மேலமேட்டுத்தெரு மகாராஜபுரம் பகுதிகளுக்கு குடிநீர் செல்ல பிரதான குழாய் அமைத்திட ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.3.60 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை 2020-2021ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் செலவிட | தீர்மான எண்: 651<br>அலுவலக குறிப்பு 1 2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கலாம். | |
| **பொருள் எண்:111** | புதுக்கோட்டை நகராட்சி பொதுமக்களுக்கு பாதுகாக்கக்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வழங்கப்படும் குடிநீர் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கவும், குடிநீரில் திரவ குளோரின் மூலம் குடிநீரில் கலந்து திருவப்பூர் குடிநீர் குளோரின் நீரெற்றும் இடம் மச்சுவாடி நீரேற்று இடம் அம்மையாபட்டி நீரேற்று இடம் ஆகிய இடங்களில் குடிநீர் உடன் குளோரின் கலக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதங்களுக்கு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்த People Chemical Industries Theni ஒப்பந்ததாரருக்கு அதே விலை விகிதத்தில் குளோரின் விநியோகம் செய்ய தற்பொழுது பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மே ஜுன் (1.2.20201 முதல் 31.7.2021) வரை குளோரின் விநியோகம் செய்ய உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.90 லட்சம். குடிநீர் பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியே மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்படி செலவுத்தொகை குடிநீர் நிதியில் இருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்: 652<br>அலுவலக குறிப்பு அ ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:112** | இந்நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை அடைப்பு அகற்றும் (Jet Rodding Machine) வாகனம் டி.என்.55ஏபி 7600 வாகனத்தில் Thermo Plastic Jetting hose பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனத்தில் பல இடங்களில் Thermo Plastic Jetting hose காற்று புகுந்து எரிந்து விடுவதால் பாதாள சாக்கடை ஆள் நுழைவு தொட்டிகளில் ஏற்படும் பழுதுகளை முழுமையாக சரி செய்ய இயலவில்லை எனவே. புதியதாக Thermo Plastic Jetting hose 130 மீட்டர் மற்றும் Jetting Hose Nozzle 2 Nos புதிதாக மாற்றிட ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.4.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை 2020-2021ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் செலவிட அனுமதிக்கலாம். ணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | தீர்மான எண்: 653<br>அலுவலக குறிப்பு 1 2 ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது |

ஒம்/ ஜீ. சுப்பிரமணியன்
தனி அலுவலர் (மற்றும்) ஆணையர் (பொறுப்பு)
புதுக்கோட்டை நகராட்சி.